முருகப்பெருமான் துணை

முருகப்பெருமான் தலைமையில் உலகம் அனைத்தும் ஞானியர்களின் ஆட்சிக்கு உட்படும்.

இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக மனமுவந்து கைப்பட எழுதிய அருள்வாக்கு

இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்.

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 750**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

18.10.2021, திங்கட்கிழமை

1. அண்ணலாய் வாழும் தவசியே
அறமாக நிறைந்து நிற்கும் ஞானியே
மண்ணுலகை காக்கும் சக்தியாக
மகான் சுப்ரமணியப்பெருமான் என் சூட்சுமமாக வந்த
2. வந்த ராஜனே அரங்கனே
வள்ளலே வாழுகின்ற ஞானியே
சிந்தைவைத்து உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
செப்பிடுவேன் ஞானஅறிவுரை ஆசி
3. சிந்தைபட அரங்கனுக்குள் என் சக்தி
விரைந்து உலகை மாற்றும் மகா சக்தியாக
இந்தவித நன்நாளில் கலந்தருள
இனியும் உலக மக்கள் தாமதிக்கா
4. தாமதிக்கா அரங்கன் வழி தொடர்ந்து
தவசி என் தர்மத்தை கைக்கொண்டு
நேமமுடன் உலகமெங்கும் தொண்டாற்றி
நிலவுலகை தர்மலோகமாக ஆக்க
5. ஆக்கவே இனிதே அரங்கன் புகழ்
அகிலமெங்கும் பரவும் காலம் தொட்டு
தேக்கமின்றி இந்த உலகமாற்றம்
தேசிகன் தேர்ந்தெடுக்கும் மாந்தர்கள் வழி
6. வழிதன்னில் ஞானவான்களாகி இனிதே
வருபவர்கள் ஞானிகளாக கனிந்தும்
கனிந்துமே ஞான ஆட்சி கலியுகத்தில் அரங்கன் தயவாலே நடந்தேறும்
நடந்தேற நன்மை கிட்டும் அரங்கன் வழி நாடெங்கிலும் அரங்கன் நாமஜெபம் போற்ற
7. ஜெபம்போற்ற உலகம் சித்தி பெறும்
ஜெபம் போற்ற உலகம் சாந்தமாகும்
ஜெபம் போற்ற உலகம் மகிழ்வுகாணும்
ஜெகம் போற்ற உலகமே பேரானந்த கதி காணும்
8. காணவே சுப்பன் யானும்
கணக்காய் அரங்கனுக்கு வழி சொன்னேன்
ஞானவழி அரங்கனை தொடருபவரே
ஞாலமதில் ஞானிகளாகி சிறக்க நேரும்

மொழிந்திட்ட ஞான அறிவுரை ஆசி முற்றே —சுபம்—